www.Padasalai.Net www.CBSEtips.in

# ஜெமி

# தமிழ்

# 10

| | |
|---|---|
| அரசு மாதிரி வினாத்தாள் | - 2019 |
| காலாண்டு மற்றும் அரையாண்டு வினாத்தாள் | - 2019 |
| பெற்றோர் ஆசிரியர் கழக வினாத் தாள் | - 2019 (6) |
| திருப்புதல் தேர்வு வினாத்தாள் | - 2020 (3) |
| | - 2022 (3) |
| பொதுத் தேர்வு வினாத்தாள் | - 2022 (1) |
| துணைத் தேர்வு வினாத்தாள் | - 2020, 2021, 2022 |

## வினா - வங்கி

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# அரசு மாதிரி வினாத்தாள் 2019 – 2020

## பத்தாம் வகுப்பு மொழிப்பாடம் தமிழ்

காலம் : 3 மணி மதிப்பெண் : 100

பகுதி –I (மதிப்பெண்கள் - 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15X1=15

1. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

அ)வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ)வானத்தையும் பூமியையும் ஈ)வானத்தையும்பேரொலியையும்

2. "மருந்தேஆயினும் விருந்தொடுஉண்" என்னும் தொடர் இடம்பெற்ற நூல்

அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை

இ) திருக்குறள் ஈ) நற்றிணை

3. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா ?" என்று வழிப்போக்கர் கேட்டது வினா."அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது விடை

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ)அறிவினா, மறைவிடை

இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ)கொளல் வினா, இனமொழி விடை

4. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி

அ) ஜால்ரா ஆ) பறை இ) உறுமி ஈ) நாகசுரம்

5. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' - இவ்வடி குறிப்பிடுவது

அ)காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ)இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

6. காற்றின் மெல்லிய ______ பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ______ பூக்களை மாலையாக்குகிறது.

அ) தொடுத்தல், எடுத்தல் ஆ) தொடுதல், தொடுத்தல்

இ) எடுத்தல், தொடுதல் ஈ) தொடுத்தல், தொடுதல்

7. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

8. 'சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.

அ) குறிஞ்சி,முல்லை,நெய்தல்,மருதம்,பாலை - நல்வினை, தீவினை

ஆ) குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை -உயர்திணை,அஃறிணை

இ) குறிஞ்சி,முல்லை,நெய்தல்,பாலை,மருதம் - அறம்,பொருள்,இன்பம்

ஈ) குறிஞ்சி,மலை,முல்லை,காடு,மருதம்,வயல்,நெய்தல்,கடல்- பனை, திணை

9. "கேள்வியினான்' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினையாலணையும் பெயர் ஆ) தொழிற்பெயர்

இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

10. கலையரங்கத்தில் எனக்காக காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

11. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது-

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் தோகையும் ஈ) சருகும் சண்டும்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

12. இப்பாடலின் ஆசிரியர் -

அ) ஔவையார் ஆ) நப்பூதனார்

இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் -

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

14. 'நனந்தலை உலகம்' - இத்தொடரின் பொருள் ?

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம்

இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ) கோடுகொண்டு, பெரும்பெயல்

இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த

## பகுதி – II(மதிப்பெண்கள் - 18)

### பிரிவு –1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 4X2=8

21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ) ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.

ஆ) 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

18. 'நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

19. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ் வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள் இருகாப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

20. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு –2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 5X2=10

22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து |
|---|

அ) வாழ்க்கையில் ______ மீண்டும் வெல்லும் - இதைத் தத்துவமாய்த் ______ கூத்து சொல்லும்.

ஆ) தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே______அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர்

24. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.சிறு – சீறு

25. கலைச்சொற்கள் தருக. Modern Literature Epic Literature

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

கல், பழம் - இச்சொற்களுக்கு கூட்டப் பெயர்களை எழுதுக.

26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

27. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. 'அறியேன்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி – II (மதிப்பெண்கள் - 18)

பிரிவு –1

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும். 2X3=6

29. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.

30. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூற்று ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தனர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

1. விருந்தினர் என்போர் யாவர்?
2. விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?
3. இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க 2X3=6

34 – ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. "உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" - இடம் சுட்டி பொருள் விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.
'நவமணி வடக்கயில் போல்' எனத் தொடங்கும் தேம்பாவணிப்பாடல்
(அல்லது)
'வாளால் அறுத்துச் சுடினும்' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2X3=6

35. 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமலை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத்தொடர் கைகளை எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தன்மை அணி குறித்து எழுதுக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5X5=25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.(அல்லது)

ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன.இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப்பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக்கடிதம் எழுதுக.(அல்லது)

ஆ) 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பில், மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றைநிரப்புக.

42. அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பவனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

| | |
|---|---|
| | பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| | எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The birds start colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீப்) என ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடுசெய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது என்பதை அறிகிறோம். தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

i) ஒரு மொழியின் இலக்கியம் யாரால் அமையப்பெறும் ?

ii) தமிழில் இலையைக் குறிக்கும் பல சொற்கள் யாவை ?

iii) தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்வாறு அறிவீர்கள் ?

iv) தமிழ்நாட்டில் கூலங்கள் எத்தனை வகைப்பட்டனவாக விளங்குகின்றன?

v) ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கும் சொல் எது ?

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 3X8=24

43. அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக. (அல்லது)

ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக. (அல்லது)

ஆ) கு. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். - இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – விண்வெளி தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை

மாதிரி வினாத்தாள் 2019 – 2020 PTA 1

பத்தாம் வகுப்புமொழிப்பாடம் தமிழ்

காலம் : 3 மணி மதிப்பெண் : 100

பகுதி –I (மதிப்பெண்கள் - 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15X1=15

1. 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
   அ) குறுந்தொகை ஆ) கொன்றைவேந்தன்
   இ) திருவள்ளுவர் ஈ) நற்றிணை
2. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
3. 'காலம் கரந்த பெயரெச்சம்' என்பது
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை
   இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை
4. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்
   அ) எள்கசடு ஆ) பிண்ணாக்கு இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி
5. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது
   அ) தொழிற்பெயர் ஆ)முதனிலை திரிந்த தொழிற்பெயர்
   இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
6. 'மாலவன் குன்றம் போனாலென்ன வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'– மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
7. கொடுக்கப்பட்டுள்ள அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க. (ம லை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)
   அ) மலையின் மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.
   ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம், அனைத்தும் நீரால் நிரம்பின.
   இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.
   ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.
8. கருணையன் என்பவர்
   அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப்
9. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
   அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
   இ)தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

10. ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

11. சோலையில் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.

அ) பூஞ்சோலை – அரும்புகள் ஆ) மலை – எறும்புகள் – தேன்

இ) பூஞ்சோலை–வண்டுகள்–தேன் ஈ) கானகம் – வண்டுகள் – நீர்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு.
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

13. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்

அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்

இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14. பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைச் சொற்கள்

அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்

இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை –

அ) தடக்கை ஆ) வளைஇ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

## பகுதி – II( மதிப்பெண்கள் - 18 )பிரிவு –1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 4X2=8

21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.

ஆ) ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுததப்படுகின்றன.

17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்"– உவமை உணர்த்தும் கருத்து யாது?

18. தமிழ்சொல்வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.

19. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

20. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

21. 'செயற்கை' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு –2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 5X2=10

22. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

23. இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) தொடு – தோடு ஆ) மலை – மாலை

24. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

26. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.குறிப்பு – எதிர்மறையான சொற்கள்அ) அருகில் அமர்க ஆ) மீளாத் துயர்

27. கலைச்சொல் தருக. Homograph, Vowel

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்ற வினா

சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

(தேன், மணி, மழை, மேகலை)

28. நாள்காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதனைத் தமிழெண்களில் எழுதுக.

ஞாயிற்றுக்கிழமை – உ ㅇ

புதன்கிழமை –

சனிக்கிழமை –

பகுதி – II பிரிவு –1 (மதிப்பெண்கள் - 18)

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும். 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது. இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது ?

இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க 2X3=6

34 – ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. வைத்தியநாதபுரி முருகன் அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "தென்னன் மகளே" எனத் தொடங்கும் 'அன்னை மொழியே' பாடல்.

(அல்லது)

ஆ) " தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2X3=6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல் - அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை விளக்கி, மூவகை தீவக அணிகளையும் குறிப்பிடுக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5X5=25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. (அல்லது)

ஆ) நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ
இதற்கென்னை வெகுண்டதென்றன் - கம்பன்.

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு – யாரம்மா! – கண்ணதாசன்

கவிச்சக்கரவர்த்தியின் கவிதையையும் கவியரசின் கவிதையையும் ஒப்பிட்டு கருத்துகளை எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு நிகழ்கலை வல்லுநர் ஒருவரை சிறப்பு விருந்தினராக அழைத்துக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவிதை ஒன்று எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பத்தனை பூர்த்தி செய்க.

42. அ) நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The birds start colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

i) மொழிபெயர்ப்பினால் மொழிவளம் எவ்வாறு பயன்பெறுகிறது ?

ii) மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவதன் காரணம் யாது?

www.Padasalai.Net www.CBSEtips.in

iii) மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் முக்கியத் தாக்கம் எவை?

iv) பிறமொழி இலக்கிய அறிவு மூலம் எவற்றை வளப்படுத்தலாம்?

v) பிற இனத்தவரின் பண்பாடு நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை எதன்மூலம் அறியலாம்

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 3X8=24

43. அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் - இவை போன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழி சுவைபட விவரிக்க. (அல்லது)

ஆ) 'பாய்ச்சல்' சிறுகதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்தும் விரிவாக விவரிக்க.

45. அ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் திகழும் அவ்வன்னைக்கு,பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து அணியாகப் பூட்டி,அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். – இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும்

தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக.

முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப்பற்று மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இரண்டாம் திருப்புதல் தேர்வு- 2019 - 2020

10 – ஆம் வகுப்பு தமிழ் காலம் : 3 மணி

மதிப்பெண் : 100

பகுதி –I ( மதிப்பெண்கள் - 15 )

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15X1=15

1. "பாடு இமிழ் பனிக்கடல் பருகிய" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

2. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா"? என்று வழிப்போக்கர் கேட்டது வினா. "அதோ, அங்கே நிற்கும் என்று மற்றொருவர் கூறியது விடை.

அ) ஐய வினா, வினாஎதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல்வினா, இனமொழிவிடை

3. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே

அ) வாட்சன் ஆ) இலா இ) பெப்பர் ஈ) ரோபோ

4. 'உப்பில்லாக் கூழ் இட்டாலும்

உண்பதே அமிர்தம் ஆகும்' - இப்பாடல் வரி இடம்பெற்ற நூல்

அ) காசிக்காண்டம் ஆ) கொன்றை வேந்தன்

இ) சீவக சிந்தாமணி ஈ) விவேக சிந்தாமணி

5. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது

அ) வஞ்சித் திணை ஆ) காஞ்சித்திணை

இ) தும்பைத்திணை ஈ) வாகைத்திணை

6. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர் உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

7. மேன்மை தரும் அறம் என்பது

அ) கைம்மாறு தருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ)புகழ்கருதி அறம் செய்வது

ஈ)பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

8. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

9. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், நாலடியார் - இவ்விலக்கியங்களுள் இருக்கும் தமிழெண்களைக் கண்டறிக.

அ) க.0.சு ஆ) கஅ, ச இ) ச, கக ஈ) ச, கஅ

10. கருத்தாழமும், வாசக சுவைப்பும் கலந்து இலக்கியங்களைப் படைத்தவர்

அ) அசோகமித்திரன் ஆ) க.நா.சு.

இ) ஜெயகாந்தன் ஈ) ஜெகசிற்பியன்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11. அருந்துணையாய் - இச்சொல்லைப் பிரித்தால் :

அ) அருந் + துணை ஆ) அருந்துணை+ பாய்

இ) அருமை+ துணையாய் ஈ) அருள் + துணையாய்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக

பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டுநுண் வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

12. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ) பரிபாடல்

13. பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

அ) பகர்வனர், நகரவீதி ஆ) கட்டும், காருகர்

இ) பகர்வனர், பட்டினும் ஈ) பருத்தி, துகிரும்

14. காருகர் - பொருள் தருக.

அ) கட்டுபவர் ஆ) நெய்பவர் இ) உழுபவர் ஈ) பாடுபவர்

15. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருட்கள் யாவை?

அ) பூக்கள் திரவியங்கள் ஆ) ஜவ்வாது, புகை

இ) சந்தனம், அகில் ஈ) அகில், சவ்வாது

## பகுதி – II ( மதிப்பெண்கள் - 18 )

### பிரிவு –1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க
21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4X2=8

16. விடைக்கேற்ற வினா அமைக்க

அ) செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

ஆ) மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து, வாழ்நாளை நீட்டிக்கும் என்கிறார் திருமூலர்.

17. பலகற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார்?

18. சங்க காலப் போர் அறம் குறித்து எழுதுக.

19. பாசவர், வாசவர், பல்நினைவிலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

20. மெய்நிகர் உதவியாளர் பற்றிக் கூறு.

21. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு –2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 5X2=10

22. கால வழுவமைதி என்றால் என்ன?

23. அடிக்கோடிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக.

அ) கபிலபரணர், உற்றார் உறவினர் ஆ) கார்குழலி பாடம் படித்தாள்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

24. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. அ) ஐந்திணை ஆ) முப்பால்
25. கலைச்சொல் எழுதுக. a) Nanotechnology b) Infrared rays
26. தற்குறிப்பேற்றணி என்றால் என்ன?
27. பதிந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. உணர்ச்சி தொடராக மாற்றுக

அ) இமயமலை மிகவும் உயரமானது. ஆ) கிளி, கல்லால் அடிபட்டது.

பகுதி – II ( மதிப்பெண்கள் - 18 )

பிரிவு –1

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும். 2X3=6

29. "பொய்க்கால் குதிரையாட்டம்" என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.
30. நவீன உலகில் எந்தெந்தப் பணிகளைச் செயற்கை நுண்ணறிவு மூலம் செய்கிறோம்?
31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கு கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

வினாக்கள்.

1) தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது?
2) நல்லோரின் இயல்பு யாது?
3) உலகம் யாரால் நிலைத்திருக்கிறது?

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க 34 – ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2X3=6

32. 'நானே தொடக்கம் நானே முடிவு
நானுரைப்பது தான் நாட்டின் சட்டம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
34. அடிபிறழாமல் எழுதுக.

"சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல் (அல்லது) "தூசும் துகிரும்" எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2X3=6

35. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல் - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்ப்பாடு தருக.

36. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறு.

37. வினா வகையையும் விடை வகையையும் தருக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5X5=25

38. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை அழகுற விவரிக்க. (அல்லது)

கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) மரம் இயற்கையின் வரம் என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலால் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும், சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவைபோன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் வழிமுறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார்

'உதவியாண்மை'என்று குறிப்பிடுகிறார். தன்னைத்தாண்டிப் பிறரைச் சிந்திக்கும்போது இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெய் ஆக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோருக்குக்கடன் என்கிறார் நல்லந்துவனார். அவ்வாறே, உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான் என்கிறார் நல்வேட்டனார்.

1) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது எது?

2) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன?

3) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் எதைக் குறிப்பிடுகிறார்?

4) உதவி செய்தலை 'உதவியாண்மை' என்று குறிப்பிடுபவர் யார்?

5) சான்றோர்க் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுவது யாது?

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 3X8=24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' என்னும் சிறுகதையில் மனத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. (அல்லது)

ஆ) மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துக்களை விவரிக்க

45. அ) விசும்பின் துளியும் பசும்புல் தலையும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று வரைக.

குறிப்புகள் : முன்னுரை - இயற்கையோடு இயைந்து வாழ்வோம் - வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் - மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் - முடிவுரை (அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி – V (மதிப்பெண்கள் - 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3X8=24

43. அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக. (அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும். (அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் - உணவினை விணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.

முன்னுரை –'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு'– சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - 'விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்'– முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

பொதுத்தேர்வு, ஆகஸ்டு – 2021

வகுப்பு 10 மொழிப்பாடம் தமிழ்

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண் : 100

பகுதி –I (மதிப்பெண்கள் - 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15X1=15

1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

2. நீலச்சட்டை பேசினார் - இத்தொடரில் 'நீலச்சட்டை' என்னும் சொல்லுக்கான தொகையின் வகையைத் தேர்க.

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

3. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது:

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

4. மேன்மை தரும் அறம் என்பது ________

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) புகழ் கருதி அறம் செய்வது

இ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

5. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி - இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்க:

அ) திருச்சி, புதுகை, நெல்லை, உதகை

ஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை

இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை

ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை

6. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்கு பரிசு வழங்கினார் - இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்.

அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு

7. சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள மருவூர்ப்பாக்கம் அமைந்துள்ள நகரம்

அ) மதுரை ஆ) புகார் இ) வஞ்சி ஈ) முசிறி

8. "நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்"- பாரதியார்

இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) வானத்து - வைத்தாங்கே
ஆ) காற்றையும - குடித்தொரு
இ) நிலவையும் - குலாவும்
ஈ) வைத்தாங்கே - வெறிபடைத்தோம்

9. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்படுவது-

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் தோகையும் ஈ) சருகும் சண்டும்

10. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும்:

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
ஆ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
இ) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
ஈ) ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்

11. ஆண் குழந்தையை "வாடிச்செல்லம்" என்று கொஞ்சுவது:

அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி
இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுமைதி

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும் ?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

12. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் :

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. செந்தமிழ் என்பது :

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார் ?

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை
இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15. வேறார் புகழுரையும் - இத்தொடரில் 'வேறார்' என்பது :

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

## பகுதி – II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.
வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4X2=8

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க

அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடியே எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.

17. வசன கவிதை – குறிப்பு வரைக

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

19. ஜெயகாந்தனின், திரைப்படமான படைப்புகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.

20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5X2=10

22. கலைச்சொற்கள் தருக. அ) Consulate ஆ) Folk literature

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா

கூட்டப்பெயர்களை எழுதுக.

அ) கல் ஆ) ஆடு

23. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

24. "இப்ப ஒசரமா வளர்ந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்ககூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கெளம்பிட்டேன்..."

உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

25. மயங்கிய – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

26. வெண்பாவின் ஓசையையும், ஆசிரியப்பாவின் ஓசையையும் எழுதுக.

27. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

மேகலை, தேன், பூ, விண், மழை, மணி

பகுதி – III (மதிப்பெண்கள் - 18)

பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும்விடையளிக்கவும். 2X3=6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும்


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும் ?

ஆ) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.

இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 2X3=6

32. "மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா."– என்ற பாடல் அடிகளில்

அ) அடிமோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

ஆ) பாரதியார் எதனை வாசனையுடன் வரச் சொல்லுகிறார் ?

இ) சுமந்து கொண்டு – என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை அமைக்க.

33. மருவூர்ப்பாக்கக் கடைத்தெருவையும், உங்கள் ஊரில் உள்ள தடைத்தெருவையும் ஒப்பிட்டு மூன்று தொடர்கள் எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "தண்டலை மயில்க ளாடத்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். (அல்லது)

ஆ) "அன்னை மொழியே" எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2X3=6

35. 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமலை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!

- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

36. கவிஞர், தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.
இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி –IV ( மதிப்பெண்கள் - 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5X5=25

38. அ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக.

\- கண்ணதாசன்(அல்லது)

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112 இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்க.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

42. அ) நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன் பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது... இந்தச் சமயத்தில் சினம் கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம். கேட்கிறோம் கைகலப்பில் ஈடுபடுகிறோம். இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நீவிர் பின்பற்ற வேண்டிய அறங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்ப்பு

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela
2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – Rita Mae Brown

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர் ஜெயகாந்தன். நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர். இவருடைய படைப்புகளுக்கு குடியரசுத் தலைவர் விருது, சாகித்திய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது மற்றும் ஞானபீட விருது, தாமரைத் திரு விருதுகளும் கிடைத்துள்ளன. "நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனிமுயற்சியின் பயனுமாகும் என்று கூறுகிறார் ஜெயகாந்தன். 'அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது' என்பது அன்னாரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

i) ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை ?

ii) மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சில் விதைத்தவர் யார் ?

iii) வாசகர் மனதில் ஜெயகாந்தன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தினார்?

iv) எது படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது ?

v) உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

பகுதி – V (மதிப்பெண்கள் - 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3X8=24

43. அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக. (அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும். (அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் - உணவினை விணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.

முன்னுரை –'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு'– சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - 'விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்'– முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# பொதுத்தேர்வு, ஆகஸ்டு – 2022

வகுப்பு 10

மொழிப்பாடம் - பகுதி I தமிழ்

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண் : 100

பகுதி –I (மதிப்பெண்கள் - 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15X1=15

1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது :
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. 'பெரிய மீசை' சிரித்தார் -கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகைஎது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
3. 'உனதருளே பார்ப்பன் அடியேனே'– யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
4. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை"
   - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
   ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
   ஈ) அங்கு வறுமை இல்லாததால்
6. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ________
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்ட ஈ) கோட்டையை முற்றுகையிடல்
7. சிலப்பதிகாரம் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ________
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
8. வாய்மையே மழைநீராகி - இத் தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
9. "சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
   சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்"– என்று பாடியவர்
   அ) திரு.வி.க ஆ) க. சச்சிதானந்தன்
   இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்
10. 'மொழி ஞாயிறு' என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) தமிழழகனார் ஆ) கம்பர் இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

11. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ)தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"காற்றே, .வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை கொண்டு கொடு"

12. 'மயலுறுத்து' என்பதன் பொருள் :
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய்
இ) அடங்கச் செய் ஈ) சீராக

13. ப்ராண ரஸம் - பொருள் தருக :
அ) உயிர் வளி ஆ) கார்பன் - டை – ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக – டை – ஆக்ஸைடு

14. 'மிகுந்த' இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம்
இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை

15. நீரலைகளின் - பிரித்து எழுதுக.
அ) நீர் + அலைகளின் ஆ) நீரின் + அலைகளின்
இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்

## பகுதி – II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.
வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4X2=8

16. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க :
அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.
ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்.

18. தேம்பாவணி – குறிப்பு வரைக.

19. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்கவும்.

20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5X2=10

22. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

23. "ஒலித்து"– பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பில்லாப் பண்டம் ஆ) ஒரு பானை

25. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

26. கலைச்சொற்கள் தருக. அ) Vowel ஆ) Discussion
குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.
அ) மீளாத் துயர் ஆ) பார்த்த படம்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

27. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

28. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்கவும்.
அ) பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும்.
ஆ) ஓரேழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்

பகுதி – III (மதிப்பெண்கள் - 18)

பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

29. " தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள் சிதறும் படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாக தொடர் மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக வெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் தோன்றி வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது.
அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?
இ) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

31. ஜெயகாந்தனின் திரைப்படப் படைப்புகளை கூறுக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க.
வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 2X3=6

32. பெருமாள் திருமொழி – நூற்குறிப்பு வரைக.

33. பூவின் நிலைகளை வரிசைபடுத்தி எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.
அ) "வாளால் அறுத்துச்"– எனத் தொடங்கும் குலசேகராழ்வார் பாடல்.
(அல்லது)
ஆ) "தூசும் துகிரும்"– எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2X3=6

35. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

36. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"
- இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

37. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

பகுதி – IV ( மதிப்பெண்கள் - 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5X5=25

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) பள்ளித் திடலில் கிடைத்த பணப் பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக.

பெயர் : அருளன், தந்தை : செல்வம், முகவரி : கதவு எண். 25, திலகர் தெரு, மதுரை வடக்கு - 2

42. அ) பள்ளியிலும், வீட்டிலும் நீ கடைப்பிடிக்கக்கூடிய நற்பண்புகளைப் பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க :

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா,

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்.

பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் ஆல மலர்; பலா மலர்.

மலர் உண்டு ; பெயரும் உண்டு ; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் சுள்ளி மலர் பாங்கர் மலர்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகுகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை,

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

i) கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் யாவை?

ii) புறத்தே காட்சிப்படாமல் உள்ளே பொதிந்திருக்கும் மலர்கள் யாவை?

iii) இனிப்பான பூக்கள் எது?

iv) எந்தப் பூ குடிநீருக்கு மணத்தை ஏற்றும் ?

v) மூங்கில் அரிசி என்றால் என்ன ?

## பகுதி – V (மதிப்பெண்கள் - 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3X8=24

43. அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்கவும். (அல்லது)

ஆ) தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

44. அ) இராமானுசர் நாடகத்தினைச் சுருக்கி கதையாய் எழுதுக. (அல்லது)

ஆ) "மங்கையராய் பிறப்பதற்கே" என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ள மூவர் பற்றி சுருக்கி எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை – கல்பனா சாவ்லா இளமைப் பருவம் – விண்வெளிப் பயணம் – விண்வெளி சாதனைகள் – முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரையாக எழுதுக.

முன்னுரை – பொருட்காட்சி வகைகள் – சென்னையில் அரசு பொருட்காட்சி – துறை அரங்குகள் – பொழுதுபோக்கு விற்பனை – பொருட்காட்சியால் விளையும் நன்மைகள் – முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# அலகுத்தேர்வு – 1

வகுப்பு : 10 மதிப்பெண் : 50
பாடம் : தமிழ் காலம் :1.30மணி

I. உரிய விடையைத் தேர்ந்தெடு 7X1=7

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பபடுவது-
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் தோகையும் ஈ) சருகும் சண்டும்
2. பாவலரேறு பெருஞ்சித்திரனார் பணியாற்றிய இதழ்
   அ) இந்தியா ஆ) சுதேசமித்திரன் இ) தமிழ்ச்சிட்டு ஈ) எழுத்து
3. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்கிறார்
   அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) கம்பர் ஈ) பாரதியார்
4. தமிழழகனார் இயற்றிய சிற்றிலக்கிய நூல்கள்
   அ) 10 ஆ) 12 இ) 14 ஈ) 16
5. கீழ்க்கண்டவற்றுள் தொடர்மொழியை எழுதுக.
   அ) கண்ணன் வந்தான் ஆ) படித்தான் இ) வேங்கை ஈ) எட்டு
6. தமிழுக்கு கருவூலமாய் விளங்குவது
   அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை ஆ) கனிச்சாறு
   இ) உலகியல் நூறு ஈ) பாவியக்கொத்து
7. செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றிவர்
   அ) க.அப்பாதுரையார் ஆ) பாவாணர் இ) கால்டுவெல்
   ஈ) இரா.இளங்குமரனார்

II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி 6X2=12
( வினா எண் 15 கட்டாயம் விடையளிக்கவும்)

8. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் யாவை?
9. இரட்டுறமொழிதல் என்றால் என்ன?
10. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
11. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
    முன்னும் நினைவால் முடிதாழ் வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக
12. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
13. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. காண், சிரி, படி, தடு
14. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
    மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.
15. பகுபத உறுப்பிலக்கணம் தருக. முகிழ்த்த



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி 4X3=12
( வினா எண் 21 கட்டாயம் விடையளிக்கவும்)

16. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

17. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

18. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம் . அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.
இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

19. நிலவகைகளைக் குறிக்கும் சொற்கள் மூன்றினையும், நீர்நிலைகளின் வகைகளைக் குறிக்கும் சொற்கள் மூன்றினையும் எழுதுக.

20. பொதுமொழியைச் சான்று தந்து விளக்குக.

21. 'அன்னை மொழியே'—எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடலை எழுதுக.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5X2=10

22. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
 தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
 ஓதி யுனர்ந்தின் புருவோமே"

23. மொழிபெயர்க்க
If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela

24. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரை இணைத்து எழுதுக.
பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

25. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.
அ) நாற்றிசையும் சொல்லாத நாடில்லைஆ) எறும்புந்தன் கையால் எண்சாண்

26. கலைச்சொல் எழுதுக. அ) Consonant ஆ) Homograph

27. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1X3=3



VI. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க 1X6=6

28. 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

29. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

# புத்தக புறவய வினாக்கள்

## இயல் 1

பலவுள் தெரிக

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்படுவது-
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் தோகையும் ஈ) சருகும் சண்டும்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -
அ) எந்+தமிழ் +நா ஆ) எந்த+தமிழ+நா
இ) எம் +தமிழ் +நா ஈ) எந்தம் +தமிழ் +நா

4. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'– தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

5. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை...........
அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை

## இயல் 2

1. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"– பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

2. செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே
செய்தி 3 – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1,2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1,3 ஆகியன சரி

3. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## இயல் 8

1. 'கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க!
   உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'

அ) அடியெதுகையை எடுத்தெழுதுக. ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக.
   கொள்க, குரைக்க

2. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.
3. குறிப்பு வரைக – அவையம்
4. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரேதொடராக இணைத்து எழுதுக.

## இயல் 9

1. தீவக அணியின் வகைகள் யாவை?
2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.
3. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்"– உவமை உணர்த்தும் கருத்து யாது?
4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
5. 'வாழ்வில் தலைக்கனம்','தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

### விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

1. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.
2. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.
3. உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது.
4. பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.
5. செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
6. திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள், நாம் படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்
7. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்க்கூறுகளைக் கொண்டுள்ளது.
8. ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுததப்படுகின்றன.
9. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காக் கட்டப்பட்டன.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## கலைச்சொல்

1.Vowel 2.Monolingual 3.Consonant
4.Conversation 5.Homograph 6.Discussion
7. Storm 8. Land Breeze 9. Tornado
10. Sea Breeze 11. Tempest 12. Whirlwind
13. classical literature 14. Epic literature 15. Devotionalliterature
16. Ancient literature 17. Regional literature 18. Folk literature
19. Modern literature 20. Nanotechnology 21. Space Technology
22. Biotechnology 23.Cosmic rays 24. Ultraviolet rays
25. Infrared rays 26. Emblem 27. Intellectual
28. Thesis 29. Symbolism 30. Aesthetics
31.Terminology 32. Artifacts 33. Myth
34. Consulate 35.Patent 36.Document
37. Guild 38.Irrigation 39.Territory
40. Belief 41.Philosopher 42. Renaissance
43.Revivalism 44.Humanism 45.Cultural Boundaries
46.Cultural values 47. Cabinet

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக**

1. "உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே"

வினாக்கள்

1. இந்நூலின் ஆசிரியர் யார்?
அ) கபிலர் ஆ) ஔவையார்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாரதியார்

2. உணர்வெழுப்ப – பிரித்து எழுதுக
அ) உணர்வு எழுப்ப ஆ) உணர் வெழுப்ப
இ) உணர்வு வெழுப்ப ஈ) உணர்ந்து எழுப்ப

3. செந்தாமரை - இலக்கணக் குறிப்பு தருக.
அ) உம்மைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

4. தும்பி என்ற சொல்லின் பொருள் யாது?
அ) வண்டு ஆ) கிளி இ) புறா ஈ) மயில



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

1. 'அசைஇ' - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொக
இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை

2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்னும் சொல்லின் பொருள்
அ) சிற்றூர் ஆ) பேரூர் இ) கடற்கரை ஈ) மூதூர்

3. பாடல் இடம்பெற்ற நூல் -
அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம்
இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்

4. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்
அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு
ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி
இ) சேந்த, செயலை, செப்பம், சிலம்பு
ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

1. சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ் மட்டும் அதில் தலைச் சிறந்ததாகும். தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் உள என்கிறார் கால்டுவெல்.

வினாக்கள்:

1. இலக்கியச் 'செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவானது எது?
2. தமிழில் உள்ளவை– பிற திராவிட மொழிகளில் இல்லாதவை எவை?
3. இப்பத்திக்கான தலைப்பு எழுதுக.

2. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட அநெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது: அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை ?

ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?

இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது ?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்டவையே.

1. இப்பத்தியில் இடம்பெறும் செப்பேட்டுக் குறிப்பு எவ்வூரைச் சார்ந்தது.

2. வடமொழிக் காப்பியங்கள் யாவை?

3. சங்கக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்ததை எதன் மூலம் அறியலாம்?

## படிவம்

### 1. நூலக உறுப்பினர் படிவம்

1. கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் நூலக உறுப்பினர் படிவத்தினை நிரப்புக.

2. விழுப்புரம் மாவட்டம், சுப்பையா நகர், சிதம்பரனார் தெருவில் உள்ள 21 – ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் திருவுடையான் மகள் எழிலி, கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை எழிலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் உரிய படிவத்தினை நிரப்புக.

### 2. மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

2. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, காமராசர் நகர், பாரதியார் தெரு 15 – ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் அமுதன் மகன் முகிலன் அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்றார். அவர் மேல்நிலை வகுப்பில் உயிரியல் பாடப்பிரிவில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு சேர விரும்புகிறார். பத்தாம் வகுப்பில் அவர் மதிப்பெண் முறையே தமிழ் - 79, ஆங்கிலம் - 72, கணிதம் - 85, அறிவியல் - 88, ச.அறிவியல் - 83. தேர்வர் தம்மை முகிலனாக கருதி கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் உரிய படிவத்தினை நிரப்புக.

### 3. விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் படிவம்

1. கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் படிவத்தினை நிரப்புக.

2. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் - வள்ளலார் நகர் - சேக்கிழார் தெரு 210 – ஆம் இலக்க வீட்டில் வசித்து வரும் இனியவன் மகள் யாழினி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து வாள்வீச்சு விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மை யாழினியாக கருதி கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் உரிய படிவத்தினை நிரப்புக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## 4. பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்

1. கொடுக்கப்பட்டுள்ள படிவங்களுள் எழுத்தர் பணி வேண்டி விவரப் பட்டியல் நிரப்புக.

2. நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், கம்பர் நகர், பாரதிதாசன் தெரு 18 – ம் இலக்க வீட்டில் வசிக்கும் மேகநாதன் மகள் கண்ணகி பத்தாம் வகுப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பயின்ற இவர் 470 மதிப்பெண் பெற்றார். கணினியில் எம்.எஸ். எக்ஸல், தட்டச்சு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை தேர்ச்சி பெற்ற இவர் தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டி விண்ணப்பிக்க விரும்புகிறார். தேர்வர் தன்னை கண்ணகியாக பாவித்து கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்க.

### இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| மூதூர், நன்மொழி, செந்தீ - | பகுபத உறுப்பிலக்கணம் |
| உறுதுயர், வளர்வானம்,<br>பயில்தொழில், காய்மணி,} -<br>உய்முறை, செய்முறை | பொறித்த – |
| | உரைத்த – |
| கைதொழுது -<br>மெய்முறை -<br>கைமுறை -<br>தடக்கை - | வருக – |
| | கிளர்ந்த – |
| | தணிந்தது – |
| | பதிந்து – |
| வியத்தல், நோக்கல்,<br>எழுதல், உரைத்தல், } -<br>செப்பல், இருத்தல், வழங்கல் | மயங்கிய – |
| | அறியேன் – |
| | ஒலித்து – |
| அசைஇ, கெழீஇ -<br>ஊழ்ஊழ் -<br>வாரா (ஒன்றன்) -<br>கேள்வியினான் - | |
| காடனுக்கும் கபிலனுக்கும்,<br>குண்டலமும் குழைகாதும், } –<br>வண்ணமும் சுண்ணமும் | |
| ஆடுக -<br>காக்கென்று -<br>கணீர் - | |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## விடைக்குறிப்புகள்

### அரசு மாதிரி வினாத்தாள் 2019 – 2020

1. ஈ) வானத்தையும் பேரொலியையும்
2. அ) கொன்றை வேந்தன்
3. இ) அறியாவினா, சுட்டுவிடை
4. ஆ) பறை
5. இ) இடையறாது அறப்பணி செய்தலை
6. ஆ) தொடுதல், தொடுத்தல்
7. இ) உருவகம்
8. ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை
9. அ) வினையாலணையும் பெயர்
10. ஈ) கல்வைத்தொடர்
11. ஈ) சருகும் சண்டும்
12. ஆ) நப்பூதனார்
13. இ) முல்லைப்பாட்டு
14. ஈ) அகன்ற உலகம்
15. அ) பாடுஇமிழ், கோடுகொண்டு

### காலாண்டுப் பொதுத்தேர்வு, செப்டம்பர் - 2019 தமிழ் தாள் 1

1. ஆ) கனிச்சாறு
2. அ) பாரதியார்
3. ஆ) கால்டுவெல
4. ஈ) சருகும் சண்டும்
5. ஈ) தொல்காப்பியர்
6. அ) காற்று
7. ஆ) (ii) (iii) – சரி
8. இ) வெற்றி வேற்கை
9. இ) 583
10. இ)மலைபடுகடாம்
11. ஆ) தினை
12. இ) கூத்தராற்றுப்படை
13. ஈ) சொல்லிசை அளபெடை
14. அ) சங்க இலக்கியம்

### காலாண்டுப் பொதுத்தேர்வு, செப்டம்பர் 2019 தமிழ் தாள்2

1. இ) எம் +தமிழ் +நா
2. ஆ) அன்மொழித்தொகை
3. இ) வினைமுற்றுத்தொடர்
4. இ) திணை வழுவமைதி
5. ஆ) 8
6. அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
7. ஆ) தொடர் மொழி
8. இ) முதனிலைத் தொழிற்பெயர
9. அ) ஆடு மேய்ந்தது
10. ஆ) அறியா வினா, சுட்டுவிடை
11. ஆ) எழுது எழுது என்றான்
12. இ) தோப்பு
13. ஈ) பண்புத்தொகை
14. அ) விளக்கு

### அரையாண்டுப் பொதுத்தேர்வு, டிசம்பர் - 2019

1. ஆ)1 - iii) 2 - i) 3 - iv) 4 - ii)
2. அ) அகவற்பா
3. அ) கருணையன் எலிசபெத்துக்காக
4. ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்
5. ஈ) ஜப்பான்
6. ஆ) கஅ ச
7. அ) வேற்றுமை உருபு
8. அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
9. அ) முல்லை
10. ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
11. அ) திருப்பதியும் திருத்தணியும
12. அ) அருளை, பெருக்கி
13. இ) அருமை+ துணையாய்
14. ஈ) நீதிவெண்பா
15. இ) கா.ப. செய்குதம்பிப்பாவலர்


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

மா. சுந்தரராஜன், PG. Asst.
B.Lit.,M.A.,B.Ed.,D.T.Ed.,
Cell: 95665 85860

மா. சுந்தரராஜன், PG. Asst.
B.Lit.,M.A.,B.Ed.,D.T.Ed.,
Cell: 95665 85860

www.Padasalai.Net

எப்பொழுதும் சராசரி மதிப்பெண் பெறும் மாணவர்கள்
நல்லதொரு மதிப்பெண் பெற விரும்புகிறார்கள்,
அதே போல் நல்ல மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள்
மதிப்பெண்களில் முழுமை பெற விரும்புகிறார்கள்.
ஆனால் வினாத்தாள் இருவருக்கும் பொதுவானது.
இந்த ஜெமி வழிகாட்டி புத்தகமானது
அதேபோல் இருவருக்குமே பொதுவானது.....

PC செந்தில்குமார்
கல்வியாளர்

# ஜெமி
# தமிழ்

ஸ்ரீ மிதுன் பதிப்பகம்
M. காட்டூர், விருதாசம்பட்டி PO.,
மேட்டூர் (வ) சேலம் (மா) - 636 453.
செல் : 95665 85860.

விலை : ரூ. 95/-

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com